**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**
**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**
**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**
**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி மாதம் 29ஆம் நாள்**
**E.P.No.10/2025**
**in**
**O.S.No.1306/2022**
**(CNR No.TNDG190000142025)**
**----**

S.பழனிச்சாமி ... மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர்

/எதிர்/

1. K.கோபால்சாமி (இறப்பு)
2. K.கருப்பாத்தாள்
3. G.ரஜேஸ்வரி
4. மைனர்.நிஷாந்த்குமார் ... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

(மேற்படி மைனருக்கு தாயாரும், கார்டியனுமான 3ம் எதிர்மனுதாரர்.)

இந்த நிறைவேற்று மனுவானது கடந்த 04.01.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு கடந்த 24.01.2024ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 06.08.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி இறந்துவிட்ட நிலையில், 2ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 24.04.2026ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>உத்தரவு</u>

**1.** எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளுக்கு பாத்தியப்பட்ட ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை ஏல இஸ்தியார் அனுப்பி, மனு சொத்துக்களை ஏலம்

விடுவதன் மூலம், மனு தொகையை வசூல் செய்து மனுதாரர்/வாதிக்கு வழங்கிட உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 66ன் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர் தரப்பு மனு சுருக்கம் :**

மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர், எதிர்மனுதாரர்கள்/ மீது கடனுறுதிச்சீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி அ.வ.எண்.1306/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதில், கடந்த 28.10.2024ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனு சொத்துக்களை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யக்கோரி இ.ம.எண்.551/2015 என்ற எண்ணில் பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனு சொத்துக்கள் 16.10.2015ம் தேதி பற்றுகை செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/தீர்ப்பு பெற்றவருக்கு தீர்ப்பாணை தொகையை செலுத்தாமல் எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் காலம் கடத்தி வருகிறார்கள். மனு சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எதிர்மனுதாரர்களுக்கு இல்லை. எனவே ஜப்தி செய்யப்பட்ட மனு சொத்துக்களை ஏலம் விடுவதன் மூலம் மனுதாரருக்கு சேர வேண்டிய மனு தொகை வகையறாவை வசூல் செய்ய இயலும் என்பதால், எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி அவர்களுக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை ஏலத்தில் விட உத்தரவிட வேண்டி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3, 4 எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுஉரை சுருக்கம் :**

இந்த மனுவில் 3, 4 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் ஆவார்கள். 4ம் எதிர்மனுதாரர், 3ம் எதிர்மனுதாரரின் மகன். 3ம் எதிர்மனுதாரர் 4ம் எதிர்மனுதாரருக்கும் சேர்த்து எதிர்பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். மனுவில் மனுதாரர் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல. 1ம் எதிர்மனுதாரரான K.கோபால்சாமி 3ம் எதிர்மனுதாரரின் கணவர். மனுதாரர், இறந்து போன 1ம் எதிர்மனுதாரரிடம் வழக்கு கடனுறுதிசீட்டின் பேரிலான கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி இந்நீதிமன்றத்தில்

அ.வ.எண்.1306/2022 என்ற எண்ணில் அசல் வழக்கு தாக்கல் செய்து, அதில் கடந்த 28.10.2024ம் தேதி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரரிடமிருந்து கடனுறுதிசீட்டின் பேரில் இறந்து போன 1ம் எதிர்மனுதாரர் கடன் பெற்றிருப்பதாக கூறியிருப்பது தவறு. இறந்து போன 1ம் எதிர்மனுதாரருககும், மனுதாரருக்கும் எந்த காலத்திலும் கொடுக்கல் வாங்கல் இருந்தது கிடையாது. இறந்துபோன 1ம் எதிர்மனுதாரர் மனுதாரரிடமிருந்து எவ்வித கடன் தொகையும் பெற்றுக்கொள்ளவில்லை. அதற்கு ஆதரவாக எவ்வித கடனுறுதிசீட்டோ, ஆவணமோ எழுதிக்கொடுக்கவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே பொய்யான காரணங்களை கூறி அசல் வழக்கின் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் 3,4 எதிர்மனுதாரர்கள் குடும்பத்தில் 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே வருமானம் ஈட்டக்கூடிய நபராவார். 1ம் எதிர்மனுதாரர் இறந்தபின்பு எதிர்மனுதாரர்கள் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார்கள். மனு சொத்துக்கள் அதிக மதிப்புடைய சொத்துக்களாகும். அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரி எதிர்மனுதாரர்கள் நடவடிக்கை எடுக்க உள்ள நிலையில், அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டு, அசல் வழக்கு தள்ளுபடி செய்ய வாய்ப்புள்ளது. இந்த நிறைவேற்று மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பிற்கு இடையூறு ஏற்படுவதுடன் எதிர்மனுதாரர்களுக்கு பெரும் பொருளாதார இழப்பும் ஏற்படும். மனுதாரர் மனுவில் கோரியுள்ள தொகை அதிகமானதாகும். மனுதாரர் வட்டி சரியாக கணக்கிடவில்லை. வழக்கறிஞர் தொகை கூடுதலாக கோரப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் மனுவை 3, 4 எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவை அனுமதிக்க வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பதே பிரச்சனையாகும்.

**5. பிரச்சனைக்குரிய தீர்வு** :

**5.1.** வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, மனுதாரர்/ வாதி, 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி மீது கடனுறுதிசீட்டின் பேரில் கடன் தொகையை வசூல் செய்யக்கோரி அசல் வழக்கு எண்.654/2015 என்ற எண்ணில் மாண்புமிகு பழனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.1306/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதில் கடந்த 28.10.2024ம் தேதி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்களை தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்யக்கோரி இ.ம.எண்.551/2015 in O.S.No.654/2019 என்ற எண்ணில் பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கடந்த 16.02.2016ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனு சொத்துக்கள் கடந்த 16.10.2015ம் தேதி பற்றுகை செய்யப்பட்டுள்ளது.

**5.2.** அசல் வழக்கில் மனுதாரர்/வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது வரை மனுதாரர் /வாதி தீர்ப்பாணையின் பலனை அடைய இயலாத நிலையில் உள்ளார். அசல் வழக்கில் இ.ம.எண்.551/2015 என்ற மனுவில் கடந்த 16.02.2016ம் தேதி பிறப்பிக்கப்பட்ட பற்றுகை உத்தரவின் அடிப்படையில், மனு சொத்துக்கள் பற்றுகை செய்யப்பட்டு, முதுநிலை கட்டளைதாரரால் மனு சொத்துக்கள் பார்வையிடப்பட்டு, மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. நிறைவேற்று மனுவில் சொத்துக்களின் மதிப்பு ரூ.7,67,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய உள்ளதாகவும், மனுதாரர் மனுவில் கோரியுள்ள தொகை அதிகமானது என்றும், மனுதாரர் வட்டி சரியாக கணக்கிடவில்லை என்றும், வழக்கறிஞர் தொகை கூடுதலாக கோரப்பட்டுள்ளதாகவும், எதிர்மனுஉரையில் தெரிவித்துள்ளபோதும், அதற்கான ஆதரவுகள் எதையும் 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை.

5.3. இந்நிலையில், ஏலச்சரத்துக்களை நிர்ணயம் செய்ய மனுசொத்துக்களின் தற்போதைய மதிப்பை அறிய வேண்டியது அவசியமாகிறது. நிறைவேற்று மனு தாக்கல் செய்த பிறகு சொத்துக்களின் மதிப்பு முதுநிலைகட்டளைதாரரால் மதிப்பீடு செய்யாமல் உள்ளது. ஏல சரத்துக்களை நிர்ணயம் செய்ய முதுநிலைகட்டளைதாரர் சொத்தின் மதிப்பினை நிர்ணயம் செய்தால் மட்டுமே ஏல சரத்தினை நிர்ணயம் செய்ய முடியும். எனவே, மனு சொத்தினை மதிப்பீடு செய்ய முதுநிலைகட்டளைதாரருக்கு உத்தரவிடுவதே சரியானதாக இருக்கும். எனவே, தற்போதைய நிலையில், மனு சொத்துக்களை மதிப்பீடு செய்ய இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. மனுவின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுதொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**6. முடிவில்,**

**மனு சொத்தின் மதிப்பினை இந்நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரரால் நிர்ணயம் செய்ய இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

**Test batta by 11.09.2026. (Batta in 3 days)**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 14ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.08.14 19:52:25 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**மனுதாரர் தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள்** – இல்லை.
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள்** – இல்லை.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.08.14 19:52:30 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்.**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி மாதம் 29ஆம் நாள்**

**E.P.No.10/2025**

**in**

**O.S.No.1306/2022**

**(CNR No.TNDG190000142025)**

**----**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கூத்தம்பூண்டி கிராமம், கழுத்தரிக்காபாளையம் அஞ்சல், கழுத்தரிக்காபாளையத்தில் வசிக்கும் சென்னியப்ப கவுண்டர் அவர்கள் மகன் இந்து சுமார் 44 வயதுள்ள S.பழனிச்சாமி

... மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர்

/எதிர்/

1. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், கூத்தம்பூண்டி கிராமம், கழுத்தரிக்கான்பாளையத்தில் வசிக்கும் லேட்.குமார்கவுண்டர் அவர்கள் மகன் K.கோபால்சாமி (இறப்பு)

2. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், கூத்தம்பூண்டி கிராமம், கழுத்தரிக்கான்பாளையத்தில் வசிக்கும் லேட்.குமார்கவுண்டர் அவர்கள் மனைவி இந்து வயது சுமார் 72 உள்ள K.கருப்பாத்தாள்

3. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், கூத்தம்பூண்டி கிராமம், கழுத்தரிக்கான்பாளையத்தில் வசிக்கும் லேட்.கோபால்சாமி அவர்கள் மனைவி G.ரஜேஸ்வரி

4. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஒட்டன்சத்திரம் டவுன், கூத்தம்பூண்டி கிராமம், கழுத்தரிக்கான்பாளையத்தில் வசிக்கும் லேட்.கோபால்சாமி அவர்கள் மகன் இந்து வயது சுமார் 13 உள்ள மைனர்.நிஷாந்த்குமார்

... எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

(மேற்படி மைனருக்கு தாயாரும், கார்டியனுமான 3ம் எதிர்மனுதாரர்.)

எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகளுக்கு பாத்தியப்பட்ட ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை ஏல இஸ்தியார் அனுப்பி, மனு சொத்துக்களை ஏலம் விடுவதன் மூலம், மனு தொகையை வசூல் செய்து மனுதாரர்/வாதிக்கு வழங்கிட உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 66ன் கீழ் மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்** : 04.01.2025

இந்த நிறைவேற்று மனுவானது கடந்த 04.01.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு கடந்த 24.01.2024ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த 06.08.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/தீர்ப்பு பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளி இறந்துவிட்ட நிலையில், 2ம் எதிர்மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 24.04.2026ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மகேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிர்மனுஉரை, வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வரும் கட்டளை மற்றும் உத்தரவாணையை வழங்குகிறது.

## <u>உத்தரவாணை</u>

1. இம்மனு செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**2.** மனு சொத்தின் மதிப்பினை இந்நீதிமன்ற முதுநிலை கட்டளைதாரரால் நிர்ணயம் செய்ய இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

Test batta by 11.09.2026. (Batta in 3 days)

2. செலவு தொகை இல்லை.

<u>**சொத்து விபரம்**</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பழனி பதிவு மாவட்டம், கள்ளிமந்தையம் சார்பதிவகம், கூத்தம்பூண்டி கிராமம்,

1) பட்டா எண்.836, சர்வே 326/2 நம்பர் ஹெக் 1.48.5–க்கு ஏ3 செ67–ல் மத்தியில் ஏ3 செ27–க்கு மால்விபரம்:–

| | | |
|---|---|---|
| வேலுச்சாமி நிலத்திற்கும் | – | வடக்கு |
| நத்தம் புறம்புகலுக்கும் | – | கிழக்கு |
| கோபால்சாமி கிரைய நிலத்திற்கும் | – | தெற்கு |
| தென்வடல் ஓடைக்கும் | – | மேற்கு |

இதற்குள் ஏக்.3 செ.27–க்கு ஹெக் 1.32.39 அளவுள்ள நிலமும்,

மதிப்பு ரூ.5,75,000/–

2) மேற்படி நிலத்தில் மேல்புறம் தென்கோடியில் உண்டான சிகஸ்து கிணர் 1–ம், அதன் தண்ணீர் துலை, தோட்டி வாரி, வாய்க்கால் வகையறாவும் முழுவதும்.

மதிப்பு ரூ.50,000/–

3) மேற்படி நிலத்தில் மேல்புறம் வடகோடியில் உண்டான து.கிணர் 1–ம், அதன் தண்ணீர், துலை தொட்டி, வாரி, வாய்க்கால், வகையறாவும் முழுவதும்.

மதிப்பு ரூ.75,000/–

4) மேற்படி கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள 5 H.P மின்சார மோட்டார், பம்புசெட் வகையறாவும், மின் இணைப்பு எண்.303–ம், அதன் வைப்புத் தொகை வகையறா முழுவதும். மதிப்பு ரூ.47,000/–

5) மேற்படி கிராமம் பட்டா எண்.2460, சர்வே எண்.326/2ல் கட்டுப்பட்ட வடகோடியில் கிழமேலாக செ.37 அளவுள்ள நிலமும்

மதிப்பு ரூ.2,00,000/–

**செலவு தொகை பட்டியல்**

| | மனுதாரர்/வாதி ரூ.பை | எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரூ.பை. |
|---|---|---|
| மனுவின் மீதான ஸ்டாம்ப் | ரூ.20.00 | --- |
| வக்காலத்திற்கான ஸ்டாம்ப் | ரூ.10.00 | --- |
| | செலவுபட்டியல் தாக்கல் இல்லை | |
| மொத்தம் | 30.00 | |

2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் நாள் என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.14 19:52:38 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**